பக்கங்கள், எட்டு

Registered as a Newspaper

Time Reader
Staff Date-Time

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஐப்பசி 04 சனிக்கிழமை (21-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 333

### எண்ணெய்க் குதங்கள் மீதான தாக்குதலின் பின்னர்

# ஆயுதபாணிகள் படையினருடன் கொழும்பில் கடும் துப்பாக்கிச் சமர்!

## இருபதுக்கும் மேற்பட்டோர் பலி! பொதுமக்கள் உட்பட 40 பேர் காயம்

கொழும்பு, ஒக்டோபர் 21

ஆயுதபாணிகள் குழு ஒன்றுக்கும் அரசாங்கப் படைகளுக்கும் இடையில் நேற்றுக் காலையில் இருந்து நண்பகல் ஒரு மணிவரை — நீண்ட நேரமாக — கடும் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது.

கொலன்னாவ மற்றும் ஊறுகொடவத்தை எண்ணெய்க் குதங்கள் (களஞ்சியங்கள்) மீது நேற்று அதிகாலை நடத்தப்பட்ட பெரும் குண்டுத் தாக்குதலின் பின்னரே, இந்தத் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது.

நேற்று நண்பகல் ஒரு மணி வரை — நீண்ட நேரமாக — துப்பாக்கிச் சண்டை தொடர்ந்து இடம்பெற்றது.

இத்துப்பாக்கிச் சமரில் இருபதுக்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர் சிவிலியன் ஒருவரும் உயிரிழந்தார்.

28 பொதுமக்கள் உட்பட 40க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்ட படையினரில் 10 பேர் விமானப்படையினர் என்றும் ஏனையோரில் இருவர் பொலிஸாரும், விசேட அதிரடிப்படையைச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரைத் தாக்க கும்பல் ஒன்று முயற்சி

### வானத்தை நோக்கி பொலீஸ் சூடு

கொழும்பு, ஒக். 21

கொலன்னாவை மற்றும் ஊறுகொடவத்தையில் நேற்று எண்ணெய்க் குதங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து கொழும்பில் தமிழர்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

ஊறுகொடவத்தையில் தமிழர்களைத் தாக்க வன்முறைக் கும்பல் ஒன்று முயற்சித்ததாகவும் அவர்களைக் கலைக்க பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-4]

## படையினரின் வாகனங்கள் பலத்த சேதம்

கொழும்பு, ஒக். 21

கொழும்பில் படையினருக்கும் ஆயுதபாணிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையின் போது பொலிஸாரின் ஜீப் வாகனங்கள் உட்பட படையினரின் வாகனங்கள் பல பலத்த சேதமடைந்தன. (ஐ)

# எண்ணெய்க் குதங்கள் தொடர்ந்து எரிகின்றன

### மக்களை அமைதிபேணுமாறு அரசு கோருகிறது

கொழும்பு, ஒக். 21

கொழும்பு கொலன்னாவ மற்றும் ஊறுகொடவத்தையில் உள்ள எண்ணெய்க் களஞ்சியத் தொகுதிகள் தொடர்ந்து எரிந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2.00 மணி அளவில் இப்பகுதிக்கு வந்த தாக்குதல் நபர்கள் முதலில் உள்ளே நுழைய முயன்றவர் என்றும்—

அங்கு பாதுகாப்புக் கடமையில் இருந்தபடையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவே அவர்கள் திருப்பித் தாக்கியதுடன் தாம் அங்கு விட்டிருந்த லொறியில் இருந்து எண்ணெய் குதங்கள் மீது றொக்கட் லோஞ்சர் தாக்குதலை நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது

இவர்கள் திருப்பித் தாக்கியதில் 10 படையினர் கொல்லப்பட்டனர் என்றும்—

சுமார் இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்கள் அப்பகுதியில் இவர்கள் மறைந்திருந்து தாக்கியதில் மேலும் 9 படையினரும் ஒரு சிவிலியனும் கொல்லப்பட்டனர் என்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## தேடிச் சென்ற சிப்பாய் சுட்டுக் கொல்லப்பட்டார்

கொலன்னாவ, ஊறுகொடவத்த குண்டு வெடிப்பில் ஈடுபட்ட தாக்குதல் நபர்களைத் தேடிச் சென்ற சிப்பாய் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரின் துப்பாக்கியை பறித்த தாக்குதல் சந்தேக நபர் ஒருவர் அதனாலேயே சிப்பாயைச் சுட்டுக் கொன்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

தெமட்டகொட - ரயில்வே பகுதியில் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

படையினர் கொலன்னாவ, ஊறுகொடவத்தை, தெமட்டகொட பகுதியில் தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். (இ-3-6)

## படையினரின் துப்பாக்கிச் சூட்டில் அகப்பட்டே ஜோர்ஜ் ஆர்னி காயம்

நேற்று அதிகாலை கொலன்னாவ, ஊறுகொடவத்தை எண்ணெய்க்குதங்கள் மீதான தாக்குதல் சம்பவத்தின் போது செய்தி சேகரிக்கச் சென்ற பி.பி.ஸி. கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி கழுத்தில் காயமடைந்தார்.

ஜோர்ஜ் ஆர்னி தற்போது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும்—

அவரது உயிருக்கு ஆபத்து இல்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

படையினருக்கும் தாக்குதல்காரர்களுக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் இவர் சிக்கிக்கொண்டார் என்றும்—

படையினரின் துப்பாக்கிச் சூடே அவரின் கழுத்தைத் தாக்கியது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜோர்ஜ் ஆர்னி நேற்று [illegible] நபர் [illegible] அளித்தார். (இ)

### துப்பாக்கிச் சூட்டில் தப்ப சுவர் பின்னால் ஒதுங்கினார்

கொழும்பு, ஒக். 21

பி.பி.ஸி கொழும்புச்செய்தியாளர் ஜோர்ஜ்ஆர்னி சுடப்பட்ட சமயம் மற்றொரு பி.பி.ஸி. செய்தியாளரான ராசிகா இப்பாலும் கூட இருந்தார்.

தாம் இருவரும் கொலன்னாவைக்கு செய்தி சேகரிக்கச்சென்ற சமயம் தங்களைச் சுற்றி துப்பாக்கிச் சண்டை நடந்ததாகவும்—

சண்டையில் இருந்து தப்புவதற்காக கோபுரம் ஒன்றின் சுவரின் பின்னால் ஒதுங்கி இருந்த போது வீதியில் நின்ற சிப்பாய் ஒருவர் யார் என்று தெரியாது சுட்டதாகவும் ராசிகா இப்பால் தெரிவித்தார்.

காயம் அடைந்த ஜோர்ஜ் ஆர்னியும் தாமும் சுமார் 10நிமிடநேரம் ஒரசிப்பாய்க்கு அருகில் நின்று கொண்டிருந்ததாகவும் துப்பாக்கிச் சண்டை சிறிது தூரம் [illegible] சென்ற பின்னர் அம்புலன்ஸ்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கில் இராணுவ நடவடிக்கை நிற்காது

### அனுருத்த நாட்டு மக்களுக்கு செய்தி

கொழும்பு, ஒக். 21

இராணுவ நடவடிக்கைகளில் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தை திசை திருப்பும் நோக்கிலேயே எண்ணெய்க் குதங்களுக்கு தீமூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

எது வரினும் இராணுவ நடவடிக்கையை நிறுத்த மாட்டோம் என அரசு சார்பில் உங்களுக்கு வாக்குறுதி அளிக்கிறேன்.

இவ்வாறு நேற்றிரவு ரூபவாஹினி மூலம் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

[8 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச கட்டுப்பாட்டுப் பகுதியின் இதயப் பகுதியை தாக்கும் திறன்

## மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்கிறார் அமல் ஜெயசிங்க

லண்டன், ஒக். 21 "அரச கட்டுப்பாட்டுப் பகுதியின் இதயப் பகுதியைக்கூட அடிக்கும் ஆற்றல் தம்மிடம் உண்டு என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபித்துக் காட்டியுள்ளனர்."

கொலன்னாவ தாக்குதல் சம்பவம் குறித்து பி.பி.ஸி செய்தியாளர் அமல் ஜெயசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கொலன்னாவ தாக்குதலில் ஈடுபட்ட 12க்கும் இடையான தமிழ்புலி கொமாண்டோக்கள் எரிபொருள் நிலைய பாதுகாப்பை உடைத்துள்ளனர் என்று பாதுகாப்புப் படைகள் கூறுகின்றன.

கொழும்புக்கு வெளியே இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் விடுதலைப் புலிகளின் துணிச்சல், கொழும்பின் பாதுகாப்பு படையினரின் குறைபாடுகளையே சுட்டிக்காட்டுகிறது.

இந்த தாக்குதல் புலிகளைப் பொறுத்தவரையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியாகும்.

கொழும்பின் பாதுகாப்பும், எரிபொருள் விநியோகமும் மீண்டும் சாதாரண நிலைக்கு திரும்பும் வரை யாழ்ப்பாண நகர் மீதான இறுதித் தாக்குதலுக்குத் தயாராக நிற்கும் இலங்கை அரசு இப்போது திரும்பவும் யோசிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

இந்த நிலை தற்காலிகமாக புலிகளுக்கு இடைவெளி ஒன்றை கொடுத்துவிட்டதாக தோன்றுகிறது. (இ-3)


## பகிரங்க அழைப்பாணை

தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்று
யாழ். மாவட்டம்

மே. நீ. வழ. இல:- 220 குற்றவியல்
யா. மா. நீ. வழ. இல:- 629/95

திரு. முருகேசு விநாயகமூர்த்தி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
- மேன்முறையீட்டாளர்

பொறுப்பாளர்
காவல்பணிமனை,
கோப்பாய்
- எதிர்வாதி

மேற்குறிப்பிட்ட வழக்கு மேன்முறையீட்டு விசாரணைக்காக 24-10-1995 அன்று காலை 9.00 மணிக்கு திகதியிடப்பட்டுள்ளது. இவ்வழக்கின் விசாரணை இல 84, கச்சேரி நல்லூர் வீதியில் தற்பொழுது அமைந்துள்ள மேன்முறையீட்டு நீதிமன்றில் நடைபெறவுள்ளது. எனவே கீழ்க் குறிப்பிட்ட சாட்சிகளை இம்மன்றில் குறிப்பிட்ட திகதியில் சமுகமளிக்குமாறு மன்று கட்டளையிடுகின்றது.

1. காராளசிங்கம் ஸ்ரீதேவி
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
2. தம்பையா காராளசிங்கம்
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
3. சு. துர்க்கா
நீர்வேலி தெற்கு. நீர்வேலி.
4. சி இராசமணி
நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோயிலடி.

நீதிமன்றின் கட்டளைப்படி
(சி/2581) பதிவாளர்.


# நீர்வேலிப் பகுதியில் வயோதிபர் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 21

மூன்று நாட்களாக உணவு, தண்ணீர் இன்றி சோர்வடைந்த நிலையில் வயோதிபர் ஒருவர் நீர்வேலி ஒல்லை என்ற இடத்தில் இருந்து நேற்று மீட்கப்பட்டார்.

நீர்வேலிப்பகுதிக்கு மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் மக்கள் வெளியேறியதை அடுத்து இந்த வயோதிபர் அனாதரவாக விடப்பட்டிருந்தார்.

நேற்று அப்பகுதிக்குச்சென்ற விடுதலைப்புலி உறுப்பினர் வீட்டினுள் முனகல் சத்தம் கேட்டு உட்சென்று பார்த்த போது வயோதிபர் சோர்வடைந்த நிலையில் படுத்திருந்ததை கண்டு அவரை மீட்டு வந்தனர்.

சின்னவன் வைரமுத்து (வயது 80) என்ற வயோதிபரே மீட்கப்பட்டவராவார்.

பசிமயக்கத்தால் சோர்வடைந்த நிலையில் காணப்பட்ட வயோதிபர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஷெல்கள் இரவு பகலாக அப்பகுதியில் அடிக்கடி வந்து விழுந்ததாகவும்—

தமது வீட்டிலும் கடந்த இரண்டு நாட்களுக்கு முன் விழுந்த ஷெல்லினால் தம்மிடமிருந்த இரண்டு ஆடுகள் அவ்விடத்திலேயே உடல் சிதறி இறந்ததாகவும் வயோதிபர் தெரிவித்தார். இச்சம்பவத்தின்போது தெய்வாதீனமாக தாம் உயிர்தப்பியதாகவும் அவர் கூறினார். [இ-15]

# யாழ். வங்கிக்கு வந்த பணம் திருகோணமலையில்

## அதிகாரிகள் நேற்று தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளுக்கென கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்ட 3 கோடி ரூபா பணம் திருகோணமலை இலங்கை வங்கிக் கிளையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் இலங்கை வங்கி அதிகாரி ஒருவரால் திருகோணமலை இலங்கை வங்கிக் கிளைக்கு எடுத்துவரப்பட்ட இப்பணம் சென்ற 17 ஆம் திகதி "ஹபறண" கப்பலில் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட இருந்தது.

எனினும் திருகோணமலை துறைமுகத்தில் இடம்பெற்ற கப்பல் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றை அடுத்து பணத்தை யாழ்ப்பாணம் எடுத்து செல்ல கூடாது என பாதுகாப்பு அமைச்சினால் திடீர் தடை உத்தரவு வழங்கப்பட்டது.

இதனாலேயே தற்போது அப்பணம் திருகோணமலை இலங்கை வங்கிக் கிளையில் வைக்கப்பட்டிருப்பதாக இலங்கை வங்கிக் கிளைகளில் பணப் புழக்கம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பான நிலையை தெளிவு படுத்த நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட காரியாலயத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற இம் மாநாட்டில் இலங்கை வங்கி அதிகாரிகளால் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:—

திருகோணமலை வரை வந்து தடுக்கப்பட்டிருக்கும் இப்புதிய நாணயத்தாள்கள் அடங்கிய பணத்தை அடுத்த வாரம் அளவில் பருத்தித்துறைக்கு வரும் கப்பலில் எடுத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் நேற்று கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பை அடுத்து இது மேலும் காலதாமதமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். அரச அதிபரினால் யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களின் ஊழியர்களுக்கான சம்பளத்தை பணமாக வழங்குவதற்கு 20 கோடி ரூபா கேட்கப்பட்ட போதும் 8 கோடி ரூபாவே யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு அனுமதி கிடைத்தது. அப்பணமும் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளது—

இப்படி பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட முகாமையாளர் யாழ். ஆஸ்பத்திரி வீதி மேல் தரக் கிளை முகாமையாளர் யாழ். மாவட்ட அரச தனியார் வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர் சங்கத் தலைவர், செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். [இ-4]


## முக்கிய அறிவித்தல்

# இரத்த தானம்

சென்ற 17-10-95 தொடக்கம் வலி. கிழக்கு பகுதியில் நடைபெறும் இராணுவத்தின் கொடூரமான தாக்குதல்களால் கவலைக்கிடமான முறையில் காயப்பட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பொது மக்கள், போராளிகளுக்கு உடன் இரத்தம் தேவைப்படுவதால் அனைவரும் தாமாக விரும்பி முன்வந்து யாழ். போதனா வைத்தியசாலையில் இயன்ற அளவு இரத்த தானம் செய்து அரிய உயிர்களை காப்பாற்ற உதவுமாறு வர்த்தகப் பெருமக்கள், வர்த்தக ஊழியர்கள், பொதுமக்கள் அனைவரையும் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

யாழ். வணிகர் கழகம்

[சி-2520]



## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
வைரமுத்து இலக்மணேஸ்வரன்
[பவா]
[முருகன் கமக் களஞ்சியம், அம்பனை]

அன்னை மடியில் 23-03-1949 ஆண்டவன் அடியில் 23-10-1992

திதி 21-10-95

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் சிகரமாய், அஞ்சா நெஞ்சுடனும், அன்பு மொழியுடனும், மங்காப் புகழுடனும் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! மூன்றாண்டுகள் என்ன, மூவாயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும், பாரினில் உன் நினைவும் பாசமும் எங்களை விட்டுப்பிரியா, உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்கா நினைவுடன் நினைவுகூரும்:-
தாய், சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்மார், மைத்துனிமார், மருமக்கள்

தகவல்:
மானிப்பாய் வீதி, வ. யோகேஸ்வரன்
உரும்பராய். [89094]


# நீர்வேலியில் ஷெல்லினால் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 21

நேற்று இடம்பெற்ற ஷெல் தாக்குதல் சம்பவத்தில் நீர்வேலிப் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை ஷெல்தாக்குதல் சற்று ஓய்ந்திருந்ததை அடுத்து அப்பகுதியில் இருந்து ஏற்கனவே இடம்பெயர்ந்த மக்கள் சிலர் தம் பொருள்களை எடுத்துவரச் சென்றிருந்தனர்.

காலை 8-30 மணி அளவில் எதிர்பாராத விதமாக திடீரென மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினாலேயே அவர்களில் இருவர் காயம் அடைந்தனர்.

நீர்வேலி கதிர்காம ஆலயப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சண்முகரட்ணம் [வயது 84], அவரது சகோதரர் ஆறுமுகம் விக்கினராசா [வயது 20] ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [இ-13-15]

# ஜி. சீ. ஈ. பரீட்சை டிச. 4 இல்

யாழ்ப்பாணம், ஒக். 21

எதிர்வரும் டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை ஜி.சீ.ஈ. [சாதாரணதர] பரீட்சை நடைபெறவிருக்கிறது.

கடந்த வருட நேரசூசியின்பாட ஒழுங்கின்படியே பரீட்சை நடைபெறும். [இ-3]

# யாழ். ஆஸ்பத்திரி படுகொலை நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஒக். 21

இந்தியப் படையினரால் கொல்லப்பட்ட டாக்டர்கள், தாதியர்கள், உட்பட 21 யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களின் 8 ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்படும்.

21 ஊழியர்களின் உருவப்படங்களுக்கு சமைச் சுடரேற்றி மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்படும்.

இதனைத் தொடர்ந்து நோயாளர் நலன்புரி சங்க தலைவர் டாக்டர் சிவபாலன் தலைமையில், நோயாளர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில், நாவண்ணனின் "அக்கினிச் சுரங்கள்" என்ற நூல் வெளியீட்டு விழா நடைபெறும். [இ-13-15]

# மரீனாவில் குண்டு வெடிப்பு

சென்னை மரீனா கடற்கரையில் புதன் மாலை குண்டு ஒன்று வெடித்ததில் தாய் ஒருவரும் அவரது குழந்தையும் உயிரிழந்தனர். மற்றும் சிலர் படுகாயமடைந்தனர் இது தொடர்பாக பொலீஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

# நோயாளருக்கு கொடுப்பனவுகள்

தென்மராட்சி, ஒக். 21

தென்மராட்சி பிரதேசத்தில் தொழுநோய், புற்றுநோய், காசநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஒக்டோபர் மாதக் கொடுப்பனவுகள் அந்தந்தப் பிரிவு அஞ்சல் அலுவலகங்களுக்கு பிரதேச செயலக நிதிப்பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணைக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்
## உயர்திரு சின்னப்பு நடேசபிள்ளை அவர்களின்
# பல்துறைக் கல்விப் பணிகளை
# வாழ்த்துவோம்

**21 - 10 - 1995**

வேலணைக் கல்விக் கோட்டத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி 21-10-1995 இல் சேவையில் இருந்து ஓய்வு பெறும் உயர்திரு சின்னப்பு நடேசபிள்ளை அவர்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினை யம்பதியில் சின்னப்பு — சின்னம்மா தம்பதிகளுக்கு மகனாக 21-10-1935 இல் பிறந்தார். இவரது தந்தையார் அவ்வூரில் நொத்தாரிசு ஆகவும் ஆசிரியராகவும் சேவை புரிந்தவர்.

திரு. சி. நடேசபிள்ளை அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயத்திலும் பின்னர் நயினாதீவு மகா வித்தியாலயத்திலும் பெற்று புலமைப் பரிசில் தேர்வில் சித்தி பெற்று தீவகத்தின் கலைக்கோயிலான வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் (சேர். வை. து ம ம. வி) இடைநிலைக் கல்விக்கான அனுமதி பெற்று கல்வி கற்று வந்தார். வித்தியாலயத்தின் விடுதியில் தங்கியிருந்து கல்வி பயின்று பலரும் போற்றும் மாணவனாகத் திகழ்ந்து மாணவர் தலைவராகவும் விளங்கியவர். இளமையில் சித்திரக் கலையில் தமது ஆற்றலைத் திறனை வெளிப்படுத்தி மாவட்ட மட்ட சான்றிதழைப் பெற்று தமக்கும் கல்லூரிக்கும் பெருமை தேடியவர்.

உயர்கல்வி

தொடர்ந்து 1953 ஆம் ஆண்டு தமது உயர்கல்வியைத் தொடர்வதற்கு யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இணைந்து உயர்தரக் கல்வியைப் பெற்றார்.

பின்னர் 1954—1958 காலப்பகுதியில் சென்னைப் பல்கலைக்கழகம் சென்று தனது பட்டக் கல்வியைப் பெற்று அங்கு தலை மாணாக்கர் வரிசையில் தன்னை நிலைப்படுத்தி கலை இலக்கியத் துறைகளிலும். விளையாட்டுத் துறைகளிலும் சிறந்து விளங்கி பல்வேறு சான்றிதழ்களையும் நன்மதிப்பு மாணவரான சான்றிதழையும் பெற்றதோடு அலாமலைத் திருச்சிராப்பள்ளியில் சமூக அபிவிருத்திப் பணியிலும் தம்மை இணைத்து சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் சமூக அபிவிருத்திப் பணியில் சிறப்பாக பணியாற்றியமைக்கான பாராட்டையும், சான்றிதழையும் பெற்றுக்கொண்டார்.

ஆசிரியப் பணி

உயர்கல்வியை நிறைவு செய்து கொண்டு தாயகம் திரும்பி 1958 இல் பதுளை சென். பீற்றர்ஸ் கல்லூரியில் பட்டதாரி சிரேஷ்ட உதவி ஆசிரியராக இணைந்து ஆசிரியர் தொழிலில் அக்கறையுடன் உழைக்கத் தொடங்கினார். அவரது சேவையும், அர்ப்பணிப்பும் 1962இல் அவருக்கு ஆசிரிய ஆலோசகர் தராதரப்பத்திரத்தை பெற்றுக் கொடுத்தது. தொடர்ந்து தமது புலத்தில் முன்னேறிப் பணியாற்றினார்.

1963இல் பதுளை ஊவாக் கல்லூரியில் உப அதிபராக பதவி உயர்வு பெற்று நிர்வாகப் பணிகளிலும் தமது ஆற்றலை வளர்க்கத் தொடங்கினார். இவரது இளமைக்கால ஆசிரியப்பணியை மலையகம் பெற்று பயனடைந்தது.

1966 இல் தான் பிறந்த மண்ணுக்கு கடமையாற்ற விரும்பி நயினாதீவு மகா வித்தியாலயத்திற்கு உப அதிபராக இடமாற்றம் பெற்று வந்து பிறந்த மண்ணுக்கு சேவையாற்றினார் இங்கு கடமையாற்றும் காலத்தில் 1970 இல் இவருக்கு விசேட பதவி ஆசிரியர் தரம்II பதவி உயர்வும் கிடைத்தது. அதன் பின்னர் 1974 இல் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் உப அதிபராக கடமை [illegible] ரது சேவையைப் பெற்றுக் கொண்டது. 1975 இல் அவர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா தேர்விலும் சித்தி பெற்று தமது புலமையை மேலும் உயர்த்திக் கொண்டார்

அதிபர் பணி

பின்னர் 1977 இல் யா/சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் உப அதிபர் பதவியை ஆற்றும் பணி கிடைத்தது. 1982 இல் இவ் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி வந்தார். நீண்டகாலம் இந்த அதிபர் சேவையாற்றி கல்விப்பணியில் உயர்ந்து வந்தார்.

ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், உப அதிபர் அதிபர் என படிப் படியாக 1990 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இவருக்கு பதவி உயர்வு கிடைத்தது. பதவி உயர்வைப் பெற்று யாழ்ப்பாணக் கல்விக் கோட்டத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்தார்.

1993இல் தனது பிறந்த மண்ணின் கல்வி நிர்வாகத்திற்கு பணியாற்றும் வாய்ப்பும் இவருக்கு கிட்டியது வேலணைக் கல்விக்கோட்டத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி நிறைவு செய்து 1995இல் வேலணைக் கல்விக்கோட்டத்தின் பிரதிக்கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று நெருக்கடிகள் சூழ்ந்த இக் காலத்தில் வேலணைக்கல்விக் கோட்ட கல்வி வளர்ச்சிக்கு தம்மால் இயன்ற பணிகளை ஆற்றியவர்.

''தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்''

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய திரு. சி. நடேசபிள்ளை அவர்கள் குடும்பச் சிறப்பும் போற்றுதற்குரியது. இவர் நயினாதீவைச் சேர்ந்த புவனேஸ்வரி அம்மையாரை 1966ஆம் ஆண்டில் மணம் செய்து கொண்டார். இவர்களின் மூத்த புதல்வன் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ண் பல்கலைக்கழக மருத்துவப் பட்டப் படிப்பை மேற் கொண்டு வருகிறார். இவரது கனிஷ்ட புதல்வர் அதே பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையிலும் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள் மூத்த மகள் யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று அங்கு இப்பொழுது விலங்கியல் துறையில் உதவி விரிவுரையாளராக கடமையாற்றுகிறார். இவரது இளைய புதல்வி தற்போது க. பொ. த. (உ. த) கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்.

கல்விப்பணி செய்தலோடு அமையாமல் நல்ல ஒரு தந்தையின் ஸ்தானத்திலும் திரு. நடேசபிள்ளை அவர்கள் உயர்ந்து நிற்கின்றார்கள். இவரது கல்விச் சேவை 21-10-1995ல் நிறைவடைந்தாலும் இவரது சேவையையும் வழிகாட்டலையும் கல்வி உலகம் என்றும் வேண்டிநிற்கும். குறிப்பாக தீவகக் கல்விச் சமூகத்திற்கு இவர் தொடர்ந்தும் தனது சேவையை வழங்குவார் என்பதில் சந்தேகமில்லை.



## சுவாமிகள் ஆசியுரை

பேரன்பு மிக்க பெருந்தகையீர்!

உயர் திரு. சி. நடேசபிள்ளை ஓய்வு பெறுவதை அறிந்தோம். வேலணை, பிரதிக்கல்விப் பணிப்பாளராக மிகத் திறம்படப் பணி புரிந்து எல்லோர் உள்ளங்களையும் கவர்ந்தவொரு சைவப் பெரியார். தகுதி வாய்ந்த ஒருவரை அவர் வாழ் நாளிலே கௌரவிப்பதுதான் யுக்தி பூர்வமானதும், செய்ய வேண்டியதுமாகும். அவ்வமயம் அவர் மகிழ்வதை நாமும் நேரில் கண்டு மனப்பூரிப் பெய்துகிறோம். அவரது நிறைவான இறைபக்தி, மென்மையான பேச்சு, ஆடம்பரமில்லா உடை, பரோபகார சிந்தனை இவை யாவர். மனங்களிலும் இடம் பெற்றன. சீரிய வாழ்க்கை வாழ்ந்த பெருந்தகை. அவர் எங்கு சென்றாலும் மதிக்கப் பெறுவர். அவர் இன்னும் பல்லாண்டு நீடு வாழ்ந்து சிறப்புற எல்லாம் வல்ல பரம் பொருளின் திருவருளை உமையாள் வேண்டி அவரை மனப்பூர்வமாக ஆசீர்வதிக்கின்றோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

சிவ சிவ.

ஸ்ரீலஸ்ரீகுருமஹா சந்நிதானம்.

## பணிப்பாளரின் வாழ்த்து

கல்வித்துறையில் 37வருட சேவையின் பின் தனது 60 ஆவது வயதில் ஓய்வுபெறவுள்ள திரு. சி. நடேசபிள்ளை அவர்களை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்து அதிபராகவும், கல்வி அதிகாரியாகவும் உயர்ச்சி பெற்று இறுதியாக வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெறும் இவரின் பணிகளை நாம் மறப்பதற்கில்லை. இக் காலப்பகுதியில் தனது பங்களிப்பால் பாடசாலைகளில் வளர்த்தெடுக்கப்பட்ட இளம் சந்ததியினரைக் கண்டு அவர் மனநிறைவு பெறலாம்.

ஆழ்ந்த அறிவும் அமைதியான சுபாவமும் எவரையும் மனம் நோக வைக்காத செயற்பாடும் இவரை நல்லதொரு கல்விமானாக உயர்த்தியுள்ளது. மிகவும் கஷ்டமான காலப் பகுதியில் வேலணைக் கல்விக் கோட்டப் பொறுப்புக்களை இவர் ஏற்றுப் பொறுப்புடன் செயற்பட்டமையை நாம் மறப்பதற்கில்லை. தனது ஓய்வுக்காலத்திலும் தனது வாழ்க்கையில் 37 ஆண்டுகளை தனது மக்களின் கல்விக்காக அர்ப்பணித்தமையயிட்டு திரு. சி. நடேசபிள்ளை அவர்கள் திருப்தியும் மகிழ்ச்சியும் கொள்வார்.

கல்வித் துறையில் அவர் ஆற்றிய அரும் சேவைகளுக்காக இச் சந்தர்ப்பத்தில் அவருக்கு நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம். ஓய்வுக் காலத்தில் தேக சுகத்துடனும் மன நிறைவுடனும் வாழ வேண்டுமென்று இவரை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

இ. சிவானந்தன்,
கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம், வலயம் - 1

## பிரதிக் கல்விப் பணிப்பாளர்

வேலணைக் கல்விக் கோட்டத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு சின்னப்பு நடேசபிள்ளை அவர்கள் கல்விப் புலத்தில் அனுபவமும், ஆற்றலும், திறனும் பெற்று நீண்டகாலமாக கற்பித்தல் தொழிற்பாட்டில் ஆத்ம திருப்தி கண்டவர். இவர் தனது வாண்மைப் புலத்தில் அமைதியாகவும், சாந்தமாகவும் தொழிற்பட்டு நிருவாகச் சிக்கல்களை தீர்த்து வைப்பவர். அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் மனங்களை வென்றி கொண்டு பணியாற்றி இன்று தமது சேவையில் இருந்து ஓய்வு பெறுகிறார். தீவகத்தின் சகோதர கல்விக் கோட்டத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் இவரது ஓய்வு காலம் சிறப்புற அமைய எனது நல்வாழ்த்துக்கள்.

நா. தணிகாசலம்பிள்ளை.
ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்ட
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

மலர் வெளியீட்டு
அமைப்பு
வேலணைக் கோட்ட
அதிபர்கள்

## சேவை புகழ்ந்து வாழ்த்து

கன்னல் சுக்கும் எனும் படிக்கு
கருத்தைப் பிணிக்கும் இனியமொழி
அண்ணல் நடேச பிள்ளை உயர்
அருள்சேர் நயினைச் சின்னப்பர்
தன் ஓர் மகனார் கற்றாய்ந்து
தரத்து உயர்ந்து பதவி. புகழ்
எண்ணா துதவிக் கல்விப் பணிப்பாளர்
என்ற பணிசெய் தின்புற்றார்.

கல்வி ஒன்றே ஈழத்தைக்
காக்கும் என்ற கருத்தேற்று
வல்லார் ஒன்று கூடி நனி
வகுத்த நெறியில் புலமையுடன்
சொல்லித் துணையாம், ஆசிரியம்
தோற்கா துழைத்த ஆணைசெய
வல்லாய் நடேச பிள்ளைநின்னை
வாழ்த்திச் சேவை புகழ்வோமே.

வேலணைக் கல்விக் கோட்ட முயர்
வுற்றது நின்னால் வாண்மைச்
சீலமும் பேணும் உயர் கல்வி
சேர்ந்தது மத்திய கல்லூரி
வேலணை பொன்விழாக் கண்டதுபோல்
சொலிக்கநின் வாழ்வு வளங்கள் மிக
சூழ்க இன்பம் சுடர்க கல்வி!
மகிழ்ந்து உலகம் புகழ்ந்திடவே

— தில்லைச்சிவன் -

விளம்பரஇல. (அ/2519)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அராலியில் தாக்கிவிட்டு பலாலி ஓடும் படையினர்!

### இப்படிக் கூறுகிறார் ரணில்

கொழும்பு, ஒக். 12

"ஸ்ரீலங்காப் படையினர் அராலியைத் தாக்கிவிட்டு பலாலிக்கு ஓடிவருகிறார்கள். இதுதான் இன்றைய யுத்தத்தின் நிலை".

இப்படிக் கூறுகிறார் எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

காலியில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

1987 இல் இந்தியப் படைகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னரும் அடிக்கடி விடுதலைப் புலிகளுடன் மோதல்கள் இடம்பெற்றன. அவ்வாறிருக்க, ஸ்ரீலங்காப் படையினரால் எப்படி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றமுடியும்

எதுவித திட்டமும் இன்றி நடக்கும் யுத்தம் மூலம் வீணான உயிர்ப்பலிகளே ஏற்படும் — என்றார். (ஓ-3)

# SACERDOTAL SILVER JUBILEE OF

## SPC. RECTOR - REV. FR. BERNARD

Today being a ceremonial day, The OBA/SPC is inaugurating a felicitous ceremony, in honour of SPC. RECTOR - REV. FR. BERNARD'S SACERDOTAL SILVER JUBILEE, fell on 19-10-1995 followed by a Luncheon hosted to him in "NAZARETH" of OBA Premises.

Sincerely wishing good luck and fortune to smile upon him, in order to elevate SPC to standards of Par excellence, in and out of Shri-Lanka.

Long live Rector Bernard!
Long live his future ambition!
Long live his health in robust physique!

S A. Oswald,
EDITOR, SPC OBA.

(39089)

# 8 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21, 22 ஆம் திகதிகளில் இந்திய இராணுவ நடவடிக்கையால் யாழ். பொது வைத்தியசாலையில் கடமையின் போது உயிர்நீத்த கீழ்வரும் உத்தியோகத்தர்கள்/ஊழியர்களுக்கு

## எமது கண்ணீர் அஞ்சலிகள்

1) வைத்திய நிபுணர் எஸ். சிவபாதசுந்தரம்
2) வைத்திய கலாநிதி கே. பரிமேலழகர்
3) வைத்திய கலாநிதி கே. கணேசரத்தினம்
4) திருமதி வா. வடிவேலு
5) செல்வி லீலாவதி முத்தையா
6) செல்வி மங்கையர்க்கரசி இராமநாதன்
7) திரு. கே. செல்வராசா
8) திரு. கே. கிருஷ்ணராசா
9) திரு. மு. துரைராஜா
10) திரு. மி. சண்முகலிங்கம்
11) திரு வி. வரதராசன்
12) திரு. கே. வேதாரணியம்
13) திரு. ஜோன் பீற்றர்
14) திரு. இ. சுகுமார்
15) திரு. க. சிவலோகநாதன்
16) திரு. எஸ். ஜெகநாதன்
17) திரு. கே. சிவராசா
18) திரு. கோ. உருத்திரன்
19) திரு. க. மார்க்கண்டு
20) திரு. இ. இரத்தினராசா
21) திரு. க. நவரத்தினம்

பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (சி-2515)

குண்டு வீச்சில் மாணவர்களை பலிகொண்ட

# நாகர்கோவில் மகா வித்தியாலயத்தை மீண்டும் இயங்கவைக்க முயற்சி

## ஆனால் மாணவர்கள் வர அஞ்சுகின்றனர்

வடமராட்சி, ஒக். 21

புக்காரா குண்டு வீச்சில் மாணவர்களை பலி கொண்ட நாகர் கோவில் மகா வித்தியாலயத்தை இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொண்ட போதிலும், அவ்வித்தியாலயத்துக்கு மாணவர்கள் செல்லவில்லை.

இப் பாடசாலையை மீண்டும் இயங்க வைக்க கல்விப் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி கடந்த திங்கட்கிழமை பெற்றோர்களை அழைத்து ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினார்.

அக் கூட்டத்தில் பாடசாலையை 8மணி முதல் 10 மணி வரையும் பின்னர் பிற்பகல் 2-30 மணி முதல் 4 மணி வரையும் இயங்க வைப்பதென முடிவு செய்யப்பட்டது.

மறு நாள் செவ்வாய்க் கிழமையும் அடுத்த நாள் புதன் கிழமையும் வித்தியாலயம் ஆரம்பமான போது சுமார் 10 மாணவர்களே சமுகமளித்தனர்.

விமான இரைச்சல் சத்தம் கேட்டதும் இம்மாணவர்கள் வகுப்புகளை விட்டு வீடுகளுக்கு ஓடத் தொடங்கி விடுகின்றனர்.

யாழ் கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் ஆலோசனைக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்த போது வானத்தில் புக்காரா இரைச்சலுடன் பறந்து திரிந்ததும் குறிப்பிடத்தக்கது. (ஓ-173)

## சத்திரசிகிச்சை நிபுணரின் இடமாற்றம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ். போதனா வைத்திய சாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எம். கணேசரத்தினத்தின் இடத்திற்கு புதிதாக ஒருவர் நியமிக்கப்படும் வரை, அவரை தொடர்ந்து யாழ். போதனா வைத்திய சாலையிலேயே கடமையாற்ற சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சம்மதம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் பேச்சுக்கள் நடத்திய வேளையில் —

டாக்டர் கணேசரத்தினத்தின் இடமாற்றத்தினால் யாழ். போதனா வைத்திய சாலையின் மருத்து சேவைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விளக்கியபோதே —

அவர் டாக்டர் கணேசரத்தினத்தின் இடமாற்றத்தை ஒத்திவைப்பதற்குச் சம்மதம் தெரிவித்ததாக — கொழும்பிலிருந்து திரும்பிய யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர்/வைத்திய கலாநிதி செல்வி ந. கனகரத்தினம் தெரிவித்தார். (அ-4.15)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ். சைவசித்தாந்த கழகம் ஒழுங்கு செய்துள்ள சிவஞான பேரீதப் பூர்த்தியும், ஆசிரியர் திரு. மு. திருஞானசம்பந்தரைப் பாராட்டும் வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் சைவ பரிபாலன சபை செயலாளர் திரு. த. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

விழாவில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையை வழங்குவார்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் திரு சி. க. சிற்றம்பலம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். (எ)

## பதுங்கு குழியுள் விழுந்து இருவர் காயம்

உரும்பிராய்ப் பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி அவசரமாக இடம்பெயர்ந்து சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவர் வீதியில் உள்ள பதுங்கு குழியில் விழுந்து காயமடைந்தனர்.

சைக்கிளை ஓட்டிச் சென்றவரான சரவணை சபாரத்தினம் (வயது 50) சைக்கிளில் கூடச் சென்றவரான பொன்னுத்துரை சாரதாம்பாள் (வயது 58) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

## குப்பைத் தொட்டியில் ஆணின் சடலம்

கிராண்ட்பாஸ் பகுதியில் சனசந்தடி மிக்க இடத்தில் உள்ள குப்பைத் தொட்டி ஒன்றினுள் மனித சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது

சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஆணின் அந்த சடலத்தில் கழுத்துப் பகுதி வெட்டப்பட்டிருந்தது. (ஐ-எ)

## கொழும்பில் கப்பல்களில் கொள்ளை!

கொழும்பு துறைமுகத்துக்கு வெளியே நங்கூரமிட்டு நின்ற இந்திய கப்பல்கள் இரண்டில் இருந்து பொருள்கள் கடற் கொள்ளையரால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க் கிழமை காலை இச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக துறைமுக கப்டன் [illegible] (ஐ-எ)

# ACCOUNTANCY EXAMS

## MAY - JUNE 1996

C I. M. A. Stage I
I. A B. சகல பிரிவுகளும்

ஆரம்பம்: **28 - 10 - 1995**

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peter's Lane,
JAFFNA.

(2476)

# 3-ம் மாத நினைவஞ்சலி



மண்ணில்: 25 - 08 - 1918

விண்ணில்: 21 - 07 - 1995

## திருமதி பாக்கியம் கார்த்திகேயன்

(கோண்டாவில் வடக்கு (நீர்கொழும்பு)

மக்களை மருகர்தம்மை மற்றுள மனித ரோடும்
பக்குவமாகப் பேசிப் பணித்திடும் வார்த்தையாலே
சொக்கவே வைத்த எங்கள் சுந்தரத் தாயே நீயும்
எக்கண மேனுமிங்கு எழுந்தோடி வந்திடம்மா.

ஊர் கண்ட மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உள்ளங் குமுற உலக வாழ்வு நீத்தனையோ
பெருவகையான சிவ சேவடி சென்ற தாயே!
நினது ஆத்ம சாந்திக்காய் பூத்தூவிப்
பிரார்த்திக்கின்றோமம்மா'

திருமதி கௌரி வேல்சாமி (மகள்,
ஆசிரியை - சன்மார்க்க மகா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

519, கே கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (39078)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு

# தென்மராட்சிக்கு மக்கள் படையெடுப்பு

## வீதியில் போக்குவரத்து நெருக்கடி

தென்மராட்சி, ஒக். 21

'சூரியப்பிரகாச' இராணுவ நடவடிக்கை தொடர்வதால் மக்கள் இடம்பெயர்ந்த வண்ணம் இருக்கின்றனர். நேற்று முன் தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு தென்மராட்சிப் பகுதியை நோக்கி படையெடுத்தனர்.

மக்கள் நாளாந்தம் தென்மராட்சிக்கு இடம்பெயர்வதால் கண்டி வீதியில் சனசந்தடி அதிகமாகக் காணப்படுகிறது. இதனால் கண்டி வீதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மக்கள் லாண்ட்மாஸ்ரர்கள் வண்டிகள் மற்றும் சைக்கிள்களிலும் கால் நடையாகவும் கண்டி வீதியில் கஷ்டங்களுடன் செல்லும் காட்சி மனதை உருக்குவதாக இருந்தது.

பெரும்பாலானவர்கள் எங்கே செல்கிறோம் என்று தெரியாத நிலையில் — கால் போன போக்கில் கவலை தோய்ந்தமுகத்துடன் சென்று கொண்டிருந்தனர்.

கடந்த இரு தினங்களில் தென்மராட்சிக்கு வந்த மக்களை நலனோம்பு நிலையங்களில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை தென்மராட்சிப் பிரதேச செயலகமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மேற்கொண்டிருந்தன.

பெரும் எண்ணிக்கையான மக்கள் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். சில வீடுகளில் மூன்று நான்கு குடும்பங்களும் தங்கியுள்ளன.

இவற்றை விட பொது இடங்கள் ஆலயங்கள் வீதியோரங்களில் கூட மக்கள் தங்கியுள்ளனர்.

இதேவேளை நேற்று முன் தினம் கோப்பாய், இருபாலைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் பலர் யாழ். நகரப் பகுதியில் ஆலயங்கள் பொது இடங்களில் கூடியிருந்தனர்.

(ஒ-117)

## தேசிய பாதுகாப்பு நிதி செலுத்தும் இடங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 21

கொக்குவில் ஜே/121, ஜே/122, ஜே/123, ஜே/124 ஜே/125, ஜே/126/ ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் —

வண்ணார் பண்ணை ஜே/97, ஜே/98, ஜே/99 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும்—

நாளை ஞாயிறு காலை 9மணி முதல் பிற்பகல் 2 மணி வரை குளப்பிட்டிச் சந்தி பாதுகாப்பு நிதி தொடர்பகத்தில் தமது பாதுகாப்பு நிதியை செலுத்துமாறு தேசிய பாதுகாப்பு நிதி நல்லூர் தொடர்பகத்தினர் அறிவித்துள்ளனர்.

அல்வாயில்

தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒப்புதல் அளித்து இதுவரை தமது நிதியினைச் செலுத்தாத அல்வாய் மேற்கு ஜே/396, அல்வாய் வடமேற்கு ஜே/397, அல்வாய் வட மத்தி ஜே/398, வியாபாரி மூலை ஜே/399, அல்வாய் வடக்கு ஜே/400 ஆகிய பகுதிகளைச் சேர்ந்தோரை நாளை ஞாயிறு காலை 9 மணி முதல் அல்வாய் சிறிலங்கா பாடசாலைக்கு சமுகமளித்து தமது பங்களிப்பைச் செலுத்தும்படி தமிழீழ விடுதலைப்புலிகள் நிதித் துறையினர் அறிவித்துள்ளனர்.

[ஒ-எ]

வடமராட்சி கிழக்கு மக்கள்

## இரட்டைச் சூட்டடுப்பு அமைப்பதற்கு ஆர்வம்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இரட்டைச்சூட்டடுப்பு அமைப்பதில் மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் இச்சிக்கனச் சூட்டடுப்பு சம்பந்தமாக வல்லிபுரக்கோவிலில் நடைபெற்ற வருடாந்த உற்சவத்தின்போது தீவிர விளக்கம் அளிக்கப்பட்டது.

இதனை அடுத்தே வடமராட்சி கிழக்குப் பகுதி மக்கள் பலரும் சிக்கனச் சூட்டடுப்பை அமைத்துத் தருமாறு வடமராட்சியிலுள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்துக்கு விண்ணப்பித்துள்ளனர்.

(ஒ-173)

## பொதுமக்களுக்கு இழப்பு ஏற்படாமல் தாக்குதலாம்

### ரத்வத்த சொல்கிறார் இப்படி!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவத் தாக்குதல்களின் போது—

பொதுமக்களுக்கு இழப்பு ஏற்படாமல் தவிர்ப்பதற்கு ஆகக் கூடிய முயற்சி எடுக்கப்படுகிறதாம்.

இதனைத் தெரிவித்திருப்பவர் வேறு யாருமல்லர். பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தயே ஆவார். பலாலியில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் படையினர் மத்தியில் கடந்த வியாழக்கிழமை பேசுகையிலேயே ரத்வத்த இவ்வாறு கூறினார் என்று "ரொய்ட்டர்" அறிவித்துள்ளது

இராணுவத் தாக்குதல் காரணமாக இதுவரை பொது மக்கள் எவருக்கும் சேதம் ஏற்படவில்லை என்றும் அமைச்சர் ரத்வத்த தெரிவித்திருக்கிறார்.

(அ-3)

# பலஸ்தீனியர்களை வெளியேறுமாறு லிபியத் தலைவர் கடாபி உத்தரவு

### மத்திய கிழக்கில் நெருக்கடி நிலை

திரிப்போலி, ஒக். 21

அண்மையில் செய்து கொள்ளப்பட்ட இஸ்ரேல்—பலஸ்தீன விடுதலை இயக்க சமாதான உடன்படிக்கையை ஆட்சேபித்து—

தனது நாட்டில் உள்ள சுமார் 30 ஆயிரம் பலஸ்தீனிய மக்களை அங்கிருந்து வெளியேற்றப் போவதாக லிபியத் தலைவர் கேணல் கடாபி அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

கடாபியின் இந்த அச்சுறுத்தலை அடுத்து பல நூற்றுக்கணக்கான பலஸ்தீனியர்கள் லிபியாவை விட்டு வெளியேறி வருகிறார்கள்.

சுமார் 600பலஸ்தீனியர்கள் கப்பல் ஒன்றில் ஏற்கனவே சைபீரிய கரையை அடைந்துள்ளனர்.

இவர்களில் சிரிய பயண ஆவணங்களை வைத்துள்ளவர்களை மட்டும் தனது நாட்டுக்குள் அனுமதிக்க சிரிய அரசு சம்மதித்துள்ளது.

லிபியாவில் இருந்து வெளியேற்றப்படும் பலஸ்தீனியர்களுக்கு பிரவேச அனுமதி வழங்கப்படமாட்டாது என்று சிரிய அரசு முன்னர் அறிவித்திருந்தது.

இதேவேளை— லிபியாவில் இருந்து வெளியேறிய நூற்றுக்கணக்கான பலஸ்தீனியர்கள் லிபிய— எகிப்து எல்லையோரம் முகாமிட்டுள்ளனர்.

இதற்கிடையில்—

லிபியாவுக்குள் சட்ட விரோதமாக ஊடுருவியுள்ள சுமார் 10 லட்சம் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தோரை லிபிய அரசு வெளியேற்ற ஆரம்பித்துள்ளது.

சூடான் நாட்டைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் பேர் ஏற்கனவே லிபியாவில் இருந்து நாடு கடத்தப்பட்டு சூடான் சென்றடைந்துள்ளனர்.

ஐ. நா சபையின் பொருளாதார முற்றுகையால் லிபியாவின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும்—

இந்த நிலையில் சட்ட விரோத குடியேற்ற வாசிகளைத் தமது நாட்டில் வைத்திருக்க முடியாது என்றும் லிபிய அரசு தெரிவித்துள்ளது.

(ஐ-க-எ)

## காயமுற்றவர்கள் தண்ணீர் கேட்டுக் கதறினர்

### இணுவிலில் தப்பியவர் கூறினார்

யாழ்ப்பாணம், ஒக். 21

குண்டு விழுந்த இடத்தில் ஒரே புகை மண்டலமாகக் காணப்பட்டது. காயம் அடைந்தவர்கள் பலர் தண்ணீர், தண்ணீர் என்று கத்திக் கொண்டிருந்தனர்.

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திச் கூட்டுறவுச் சங்க சிற்றூழியரான சி. ராஜராஜேஸ்வரன் புதனன்று இணுவிலில் இடம்பெற்ற புக்காரா குண்டு வீச்சுக் குறித்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குண்டு வீச்சிலிருந்து அவர் மயிரிழையில் தப்பி இருந்தார்.

அவர் தெரிவித்ததாவது:

புக்காரா குண்டு எம்மை நோக்கி வருவது போன்ற இரைச்சல் கேட்டதும் தாமதம் நான் வீட்டின் பின்புறம் நிலத்தில் குப்புறப் படுத்துக்கொண்டேன். குண்டு வெடித்த அதிர்வு என்னை மூன்று யாருக்கு அப்பால் தூக்கி வீசியது.

குண்டு வெடித்த இடத்திலிருந்து மேல் எழுந்த மண் இலை, குழைகள் என் மீது அள்ளி வீசப்பட்டன.

எங்கும் ஒரே கரும்புகை மூடப்பட்டிருந்தது. எவரையும் அடையாளம் காண முடியவில்லை.

இந்தப் புகைக்குள் இருந்து மரும்பிய போது எங்கும் அழுகுரல்கள் கேட்டன. காயப்பட்டவர்கள் பலர் தண்ணீர் தண்ணீர் எனக் கத்தினர். வீட்டு யன்னல், கதவுகள் பிணைச்சலோடு பிடுங்கி வீசப்பட்டிருந்தன. வேலிகள் அப்படியே இளப்பி வீட்டிற்குள் வீசப்பட்டிருந்தன.

குண்டு வீழ்ந்து வெடித்த பங்கருக்குள் பலர் மண்ணினால் மூடப்பட்டிருந்தனர். அவர்களை வெளியே எடுத்த போது பலரது மூக்கில் இருந்தும் இரத்தம் பெருகியது அவர்களில் பலர் மண் மூடியதனால் மூச்சுத் திணறி உயிரிழந்தது தெரிய வந்தது. இப்படி அவர் கூறினார்.

[இ-1]

## காஸ்நிறுவனம் தனியார் மயம்

கொழும்பு ஒக் 21

வரையறுக்கப்பட்ட கொழும்பு காஸ் (Gas) கொம்பனியின் 51 சதவீத பங்குகளை லண்டனில் உள்ள ஷெல் என்னும் நிறுவனம் 193 கோடியே 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கொடுத்து கொள்வனவு செய்ய முன்வந்துள்ளது.

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், பொதுவசதிகள் சேவையில் ஈடுபட்ட நிறுவனம் ஒன்று தனியார் மயமாக்கப்படுவது இதுவே முதலாவதாகும்.

லண்டன் ஷெல்கொம்பெனி ஓவர்சீஸ் முதலீட்டு நிறுவனத்தின் சார்பில் இந்தப் பங்குகளைக் கொள்வனவு செய்ய முன்வந்திருக்கிறது.

1917ஆம்ஆண்டு முதல் சமீப காலம் வரை ஷெல் கொம்பனி இலங்கையில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தது. அது மீண்டும் வருகை தந்துள்ளது. ஆசிய நாடுகளில் அதன் நடவடிக்கைகளை விரிவாக்க இருப்பதன் பீடிகையே என்று கருதப்படுகிறது.

[ஒ-க]

## பரிசளிப்பு விழா

மத்திய கல்லூரி பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும் பரிசு பெறும் மாணவர்கள் காலை 8 00 மணிக்கு பாடசாலைக்கு வருமாறு அதிபர் கேட்டுள்ளார்.

## கூ. சங்க வெதுப்பகம்

வடமராட்சி, ஒக். 21

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் வெதுப்பகம் ஒன்றை புதிதாக அமைக்கவுள்ளது.

இதற்கான ஆரம்ப வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

[எ-173]

## வித்தாரம்

என்ன அறிவழகா, வந்தாச்சா ...?

நேற்றுக் காலையிலை வந்த அதிர்டிச் செய்தியை உடனேயே கேள்விப்பட்டீரோ அல்லது பின்னேரம் பத்திரிகையிலை பார்த்துத்தான் தெரியுமோ ...?

இஞ்சை எங்கடை சனம், ஆமிக்காறற்றை ஷெல்லுக்குப் பயந்து பெட்டி படுக்கையோடை இடம்பெயர்ந்து போறது போன்ற ஒரு காட்சியை —

கொழும்பு மாநகரத்தின் வட-கிழக்குப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் சூட்கேஸ் பெட்டிகளுடனும், உடுத்த உடுப்புகளுடனும் ஓடிய காட்சியை அங்கையிருக்கிற செய்தியாளர்கள் கண்டிருக்கினம்...!

இஞ்சை அது எங்களுக்கு நாளாந்தக் காட்சியள் ...

திடீரென வரும் பதகழிப்பிலை உயிருக்கு ஆபத்து வரப்போகுது எண்ட பயத்திலை தமிழ்ச் சனம் என்ன பாடுபடுகுதுகள் எண்டதை—

கொலன்னாவை, ஊறுகொடவத்த பகுதிகளைச் சுற்றிவரவுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த சிங்களச் சனம் இப்ப அனுபவிச்சிருக்கும்

வாத்தியளே அங்கை ஒரு சம்பவம் நடந்த உடனை ஊரடங்கு போட்டு கொள்ளையள், சூறையாடல்களைத் தடுக்க முயன்றிருக்கினம்... ..

பாதுகாப்புப் படையினர்......

இஞ்சையெண்டா எங்கடை சனத்தை இடம்பெயர்ந்து ஓடவைச்சிட்டு, தாங்களே வீடுகளை உடைச்சுச் சூறையாடுகினம்......

அது போக—

கொழும்பிலை இருக்கிற எங்கடை தமிழ்ச் சனத்துக்கு இனி இரண்டு மூண்டு கிழமைக்கு பெரிய சோதனைக் காலமாகத் தான் இருக்கும்......!

அது சரி, கொழும்புப் பிரதேசம் கடும் பாதுகாப்புகளுடன் கூடியது காலி மையிலுக்கு ஒரு விதித்தடைச் சோதினை. எங்கை பார்த்தாலும், எந்த மூலை முடுக்கிலும் ஆயுதம் தாங்கிய படைகள் பகலும் இரவும் இருபத்திநாலு மணி நேர சோதினை.

கேந்திர நிலையங்கள் எல்லாம் தீவிர பாதுகாப்புப் போடப்பட்டிருக்குது. எண்டு அடிக்கடி கொழும்புப் பேப்பர்களில் செய்தியள் வந்து கொண்டு இருந்திது.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் கடுமையான இராணுவத்தாக்குதலுக்கு கொழும்பில ஒண்டில்லை இரண்டில்லை பல பதிலடியள் நடைபெறும் எண்டு எதிர்பார்த்து பாதுகாப்பு வட்டாரங்கள் கண்காணிப்பாக எச்சரிக்கையாக இருப்பதாகச் சொல்லிச்சினம்,

எண்ணெய்க் குதம் அமைஞ்சுள்ள கொலன்னாவை பெரும் விஸ்தீரணம் கொண்ட இடம். நூறு ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் குதங்கள் அடுக்கடுக்காக இருக்கும்.

பேஸ் லயின் றோட்டிலை பொரளையிலை தொடங்கி தெமட்டகொடை, வெல்லம்பிட்டி, ஊறுகொடவத்த எண்டு நீண்டு கொண்டு போகுது...

சாதாரண காலத்திலேயே அந்த இடத்துக்குள்ளை போறாதுக்குப் பல சோதனைகளுக்கு ஆளாக வேணும். இப்ப அங்கை முந்தினதை விட பாதுகாப்பு கர்ண கொடூரமாக இருந்திருக்கும்...

அப்பிடியிருக்க அதுக்குள்ளை போய் அதிரடி நடத்திறது எண்டது மெத்தக் கெட்டித்தனமான வேலை தான்...

ஸ்ரீலங்கா பொலீஸாரும், பாதுகாப்புப் படையினரும் எப்பவுமே வெள்ளம் வந்த பிறகு தான் அணை கட்டுவினம்.... அந்த அணையும் வெள்ளம் வடியுமுன்னரே கரைஞ்சு போயிடும்....!

— கொண்டோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வான்கோழி, வாத்துகோழி, தாரா, குஞ்சுகள், இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: மருதம் கோழிப் பண்ணை, பலாலி வீதி, திருநெல்வேலி. (சி-2501)

பொமரேனியன் நாய்க் குட்டிகளும், அத்துடன் ஒரு வயது நிரம்பிய கறுப்பு/வெள்ளை ஆண் பொமரேனியன் நாய்களும் விற்பனைக்குண்டு. சி. சிவா, இல 22, செம்மணி வீதி, நல்லூர். (கிட்டு பூங்காவிற்கு அருகில்) (39087)

சிறுவருக்குரிய சொப்பர் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 20, செல். பீற்றேர்ஸ் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கடைக்கலம் மாதா கோவிலுக்குச் சமீபமாக) (38912)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம்செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் (39058)

நல்ல நிலையில் உள்ள ஹொண்டா HO-2 C-90 மோட்டார் சைக்கிளும். முட்டையிடத் தொடங்கி 1½மாதம் நிரம்பிய வெள்ளைலகன் பிறவுன் கோழிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. செல்லையா, விவசாயப் பாடசாலை முன்பாக, பலாலி வீதி, திருநெல்வேலி (39079)

8-10 H. P, 2400 RPM. Yanmar டீசல் இயந்திரம், Welding Transformer நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிறிகரன், ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் (நிரு சியூசன் சென்ரர் முன்பாக) (39084)

நல்ல இன ஆட்டுக்கடா 10 மாதம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: M A. Raj, 52/1, கொழும்புத் துறை றோட், சந்தைமாதா கோவில் முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (39082)

## தேவை

வேலைத்தளத்தில் தங்கியிருந்து கோழிகள், ஆடுகள் பராமரிப்பதற்கு ஓர் ஆள் தேவை. குடும்பத்தோடு தங்கியிருக்கவும் வசதியுண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39059)

## மணப்பெண் தேவை

சவூதியிலிருந்து வந்துள்ள பல் குறைபாடுள்ள பிரமச்சாரிக்கு உறவினரின்றி தனிப்பட ஏற்று திருமணப்பதிவு செய்யக்கூடிய அழகிய மணமகள் 37 வயதுக்குள் தேவை. தொழிலுள்ளவர் விரும்பத்தக்கது. ஜாதகம் முழு விபரத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இல 979, மே/பா உதயன். (8664)

## விசேஷ அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளுக்கு அன்ரனா பொருத்துவதற்கும், வீடியோ கமரா, ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள் திருத்துவதற்கும் வீனஸ் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி-2484)

## சோதிடம்

ஜாதகம் கணிக்க கல்வி, தொழில், திருமணம் எதிர்கால பலன் அறிய இல. 361, பருத்தித்துறை வீதி, நல்லூர். (39048)

## SALE

Morris Minor 1000 U K. Import One owner for Sale Seen Between9 a m.to 6 p.m. no Weekends101/1, Oddumadam Road, Jaffna (39060)

## வணிக புள்ளி விபரவியல்

வணிகப் புள்ளி விபரவியல் க. பொ. த. உயர்தரம் பகுதி I ஆக்கம் ராஜ் எஸ் குமார் B. Sc, செ. ஜெயரமணன் B Sc. விற்பனையாளர்: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-2456)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
மகாபொல கொடுப்பனவு
8 ஆம் தவணைப்பணம்

கலை, விஞ்ஞான பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான மகாபொல 8 ஆம் தவணைப் பணம் யாழ். பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவுக்கான நேர அட்டவணை பல்கலைக் கழக அறிவித்தல் பலகைகளில் இடப்பட்டுள்ளது.

— பதிவாளர்

(சி/2518)

---

# O\L இலவச மீட்டல் வகுப்புகள்

விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல்
சனி — 10 - 00

ஆரம்பம்: 21 - 10 - 1995

BOND கல்வி நிறுவனம்

58, A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8665)

---

## பரி. கன்னிமரியாள் ஆலயம்
கோப்பாய்

## பரி. இம்மானுவேல் ஆலயம்
உரும்பிராய்

மேற்படி சபையாருக்கான
ஞாயிறு ஆராதனை
யாழ். பிரதான வீதியிலுள்ள சிறிஸ்துநாதர் ஆலயத்தில்

22 - 10 - 95 மாலை 4 மணிக்கு நடைபெறும். சபையார் அனைவரும் இதில் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

வண. C. D T ஜோசப்,
சபைக்குரு.

(39085)

---

# 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 11 | 21 |
| — | — |
| 01 | 10 |
| — | — |
| 1911 | 1988 |

## அமரர் வீ. அப்பாத்துரை
(தபால் கட்டை சந்தி - அரியாலை)

"இறைவன் அருளில் அமர்ந்திர் போற்றி"

உமது நினைவில் இருக்கும்:
மனைவி, மகன், மகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

(486) 188 கண்டி வீதி, அரியாலை. (39066)

---

# மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து



## ★ செல்வன் வி. முகுந்தன் ★

விவேகானந்தன் — நித்தியா தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
✶ முகுந்தன் ✶
தனது மூன்றாவது பிறந்த நாளை
இன்று கண்டியில் கொண்டாடுகின்றான்.

இவரை பிரான்ஸிலிருக்கும் அன்பு அப்பா, அம்மா, பண்டத்தரிப்பிலிருக்கும் அம்மம்மா, அன்ராமார், மாமாமார், சித்தப்பாமார், பெரியம்மாமார், அண்ணா, அக்காமார், தங்கை, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் சுற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் மருதடி விநாயகர் அருள்பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

'மலர் வாசம்',
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (39056)

---

# தீபாவளி மலிவு விற்பனை

- ✶ சேட் L/S S/S
- ✶ போய்ஸ் சேட்
- ✶ போய்ஸ் சோட்ஸ்
- ✶ விஸ்கோஸ் பிரிண்டட் 44", 60"
- ✶ விஸ்கோஸ் பிளேன் 44"
- ✶ சில்க பொலியஸ்ரர் பிளேன் 44"
- ✶ ஸ்கேட் அண்ட் பிளவுஸ்
- ✶ கவுண்
- ✶ ஸ்கேட்
- ✶ பிளவுஸ்
- ✶ இந்தியன் கொட்டன் சாறிகள்
- ✶ ஜே. பி. நைலெக்ஸ் சாறிகள்

இவை அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

இன்றே வருகை தாருங்கள்

## த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
156, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(39086)

---

# விசேஷ அன்ரனா

ரூபவாஹினி, மட்ராஸ் நிகழ்ச்சிகளுக்கு
அன்ரனா பொருத்துவதற்கும்,

வீடியோ கமரா, ரி. வி. டெக், றேடியோக்கள்,
மணிக்கூடுகள் திருத்துவதற்கும்

## வீனஸ், டில்கா வாச் & றேடியோ வேக்ஸ்

284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை:
பஸ் நிலையம், சாவகச்சேரி.

Our Qualified Experienced
Technical & Tutorial Staff

**T. Thanabalasingam** B Sc. [Ceylon]
Dip - in Electronic Engineering (Lond)
[Specialist in V. C. R. Service]

(சி-2489)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## உறவுகளின் மௌனம்

ஈழத் தமிழர்களைப் பூண்டோடு அழிக்கும் நோக்கத்துடனேயே சந்திரிகா அரசு தற்போதைய போரை ஆரம்பித்திருக்கிறது. இன்றுள்ள நிலையில் உலகில் உள்ள தமிழர்கள் ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுக்கவேண்டும்.

உலகில் உள்ள, மனிதாபிமானத்தில் நாட்டம் கொண்ட அனைவரும் சிங்கள இராணுவத்தின் தாக்குதலுக்கு எதிராகத்தமது போர்க்குரலை எழுப்பவேண்டும்.

இவ்வாறு உலகத் தமிழர்களுக்கும், உலகில் உள்ள மனித நேயம் உள்ள மக்களுக்கும் அறைகூவல் விடுத்திருக்கிறார் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. வை. கோபாலசாமி.

பி. பி. ஸிக்கு வழங்கிய செவ்வியில், ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தமிழ் இனப்படுகொலையை மட்டுமன்றி போரினூடாக சமாதானம் என்ற அதன் இரட்டைவேடத்தையும், உலகத்தை ஏமாற்றும் தந்திரத்தையும் அவர் மிகத் துலாம்பரமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

தமிழ் மக்களை இனப்படுகொலை செய்துகொண்டு, இனப்பிரச்சினைக்குத் தாம் தீர்வு ஒன்றை முன்வைத்துள்ளதாகக் காட்டி உலகத்தை ஏமாற்றும் தந்திரத்தை, வேடத்தை, கோபாலசாமி களைந்து காட்டியிருக்கிறார்.

இந்த உண்மை நிலை இந்தியாவுக்கோ அன்றி வேறு வெளிநாடுகளுக்கோ தெரியாமல் இருக்க, அல்லது புரியாமல் இருக்கக், காரணமில்லை.

ஸ்ரீலங்கா அரசாங்கம் சர்வதேச மட்டத்தில் நடத்தும் பொய்ப்பிரசாரங்களை முறியடிக்கும் வகையில் எதிர்ப் பிரசாரம் — உண்மையை எடுத்துச் சொல்லும் தகவல்கள் — நிறைய வெளி உலகத்துக்குச் சொல்லப்படுகின்றன.

எனவே உலக நாடுகள் குறிப்பாக மேற்கு நாடுகள் தமிழர்கள் மீதான தாக்குதல்களை — இனப்படுகொலையை நிறுத்துமாறு சந்திரிகா மீது அழுத்தம் போடாதிருப்பது மிகவும் கவலைக்கு உரியதாகும்.

மேலும் தமிழர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் சிங்கப்பூர், மலேசியா, இந்தியா போன்ற நாடுகள் இது விடயத்தில் மௌனம் சாதிப்பது வருத்தத்தைத் தருகிறது.

சந்திரிகா அரசு தமிழர்களுக்குச் செய்யும் அநியாயங்களை, கொடுமைகளை மேற்கண்ட நாடுகளில் வாழும் தமிழர்கள் தத்தமது நாட்டு அரசுகளுக்கு வெளிப்படுத்தவில்லை.

லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இடம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் சந்திரிகா அரசின் தமிழருக்கு எதிரான கொடுமைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணிகள் போன்றவற்றை நடத்த —

மலேசியா, சிங்கப்பூர் வாழ் தமிழர்கள் எதுவும் தெரியாதவர்கள் போல இருக்கிறார்கள். தமிழகத்திலும் பெரிதாக எதுவும் நடக்கவில்லை.

தமது அவல நிலை கண்டு அந்நியன் இரங்காவிடினும் தனது சொந்த உறவுகள், வெளிநாடு வாழ் தமிழர்கள் தம்மால் இயன்றவரை உதவ முன்வரவில்லை என்பது ஈழத் தமிழர்களின் இதயத்தை நெருடுகிறது.

கோபாலசாமி போன்ற ஒருவராவது ஈழத் தமிழனுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பது அந்த நெருடலை ஓரளவேனும் குறைக்கிறது.

## எண்ணெய் வாங்க கானுடன் அலைந்த மக்கள்

கொலன்னாவையிலும் ஊறுகொடவத்தையிலும் எண்ணெய்க் குதங்கள் தீப்பற்றிய சம்பவத்தை அடுத்து யாழ். குடாநாட்டில் எரிபொருள் விலை திடீர் என உயர்ந்தது.

பல கடைகள் மண்ணெண்ணெய் போத்தல்கள் இன்றி வெறிச்சோடிக்கிடந்தன. விற்பனை இடம்பெற்ற கடைகளில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 100 ரூபா முதல் 110 ரூபா வரை விற்கப்பட்டது.

காலையில் எண்ணெய்க் கடைகளின் முன் நீண்ட கியூ காணப்பட்டது. மாலையில் அனேகமான கடைகளில் எண்ணெய் காணப்படாததால் பலர் எண்ணெய்க் "கான்"களுடன் அலைந்து திரிந்ததைக்காண முடிந்தது.

## வாகன விபத்தில் சிறுமி மரணம்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை நாவலர் வீதியில் மனோகராதியேட்டர் சந்திக்கு சமீபமாக நேற்றுக் காலை இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

வேலணையில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் ஐந்து சந்திப்பகுதியில் வசித்து வரும் சண்முகலிங்கம் கோகிலா (வயது 13) என்ற சிறுமியே உயிரிழந்தவர் ஆவார்.

படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட சமயம் அவர் மரணமானார். [இ-13-15]

# வானில் திரளும் புகைமண்டலம்: பெரும் சூழல் பாதிப்பு அபாயம்!

### கொழும்பில் கறுப்பு மழை பெய்யலாம்

கொழும்பு, ஒக். 21

எண்ணெய்க்குதங்கள் தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதால் வானில் கரும்புகை மண்டலம் திரண்டு வருகிறது. இதனால் நாட்டில் பெரும் சூழல் பாதிப்பு அபாயம் ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

அனர்த்தம் நிகழ்ந்த கொலன்னாவ, ஊறுகொடவத்த பகுதிகளில் நேற்றுப்பகலில் மழை பெய்தது.

வானில் திரண்ட கருமுகில்களே அதற்குக் காரணம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பெய்த மழை நீரில் சுகாதாரத்துக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய கறுப்பு நிறமான படிமங்கள் காணப்பட்டதாக பரிசோதனையின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கிணறுகள் மற்றும் நீர் நிலைகளில் இந்த மழை நீர் கலந்துள்ளதால் பொது மக்களுக்கு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நன்கு கொதித்த நீரை பருகுமாறு கொழும்பு வாழ் மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

மழை நீர் கலக்காதவாறு கிணறுகளை மூடி விடும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் முகத்தை துணிகள் அல்லது கவசங்கள் கொண்டு மறைத்துக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளிமண்டலத்தில் கருமை நிற தூசிப் படிவுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. வெள்ளை நிற ஆடைகளில் அவை படியக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வானில் திரளும் கருமுகில் கடலை நோக்கிச் சென்று — கடலில் மழை பெய்திருக்குமாயின் இத்தகைய பாதிப்புகள் ஏற்பட்டிருக்கமாட்டாது என்று நிபுணர்கள் தெரிவித்தனர்.

இந்த கரும்புகை மண்டலத்தினால் அயலில் உள்ள நாடுகளிலும் வளிமண்டலப்பாதிப்புகள் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த சில தினங்களில் கொழும்பில் கறுப்பு மழை பெய்யக் கூடும் என்று வானிலை நிபுணர்கள் எதிர்பார்த்துள்ளனர். [ஐ-3]

# இந்தியாவிலிருந்து தீயணைக்கும் இரசாயனம் அவசரமாக தருவிப்பு

கொலன்னாவை ஊறுகொடவத்தை எண்ணெய் களஞ்சியத் தொகுதிகளில் ஏற்பட்டுள்ள தீயை அணைப்பதற்கு "அக்ரோ போம்" என்ற இரசாயனம் இந்தியாவிலிருந்து விமான மூலம் கொண்டுவரப்படுவதாக அமைச்சர் கேணல் ரத்வத்த தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து தீயணைக்கும் படை நிபுணர்களும் வருகின்றார்கள்.

25 ஆயிரம்தொன் "அக்ரோ போம்" இரசாயனத்தை இந்தியாவில் உள்ள நிறுவனம் ஒன்று வழங்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

# ரயில் சேவைகளும் கொழும்பில் பாதிப்பு!

எண்ணெய்க் குதங்கள் மீதான குண்டுத் தாக்குதலை அடுத்து கொழும்பில் ரயில் சேவைகள் தடைப்பட்டுள்ளன.

குண்டுத் தாக்குதலினால் ரயில் பாதைகள் எதுவும் சேதமடையவில்லை. ஆனால் சம்பவம் நடந்த பகுதியூடாகச் செல்லும் தண்டவாளங்கள் வெப்பத்தினால் விரிவடையும் ஆபத்து இருப்பதினாலேயே ரயில் சேவைகள் சில இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து ராகமை செல்லும் ரயில் நிறுத்தப்பட்டுள்ளது. வேறு பல ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. [ஐ]

# டீசல், மண்ணெண்ணெய் பெருமளவில் எரிந்து நாசம்

### அரசுக்கு ரூ. 150 கோடி நட்டம்

கொழும்பு, ஒக். 21

கொலன்னாவை, ஊறுகொடவத்தையில் நேற்று ஏற்பட்ட தீயினால் 40 ஆயிரம் தொன் டீசலும், 15 ஆயிரம் தொன் மண்ணெண்ணெய்யும் நாசமாகிவிட்டன.

அவை எட்டு குதங்களில் இருந்தன.

இதனால் அரசுக்கு 150 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பெற்றோலியம் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்தார். (இ-3)

# தாக்குதல் நடத்தியோரில் நால்வர் கைது என்கின்றனர் பொலீஸார்

எண்ணெய்க் குதங்கள் மீது குண்டுத் தாக்குதல் நடத்திய ஆயுததாரிகளில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பொரளைப் பகுதியில் வீடு ஒன்றில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

தாக்குதல் நடத்திவிட்டு தப்பி ஓடிய ஆயுததாரி ஒருவரை சுட்டுக் கொன்றுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர் வேறு சில ஆயுததாரிகளுடன் "ஹைஏஸ்" வான் ஒன்றில் தப்பிச் செல்ல முயன்றபோது வானைத் தடுத்து நிறுத்தி பொலீஸார் தாக்குதல் நடத்தினர் என்றும்—

அவருடன் கூட வந்த ஏனையோர் தப்பிச் சென்றுவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-ஐ)

### ஐ. நா. மாநாட்டில் பங்குபற்ற

# சந்திரிகா புறப்பட்ட பின்னரே தாக்குதல்!

கொழும்பு, ஒக். 21

ஐ. நா. சபையின் பொன்விழா கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நியுயோர்க் சென்றுள்ளார்.

விசேட விமானம் ஒன்றில் கொழும்பில் இருந்து ஜனாதிபதி பயணமாகிய பின்னரே கொலன்னாவை எண்ணெய்க் களஞ்சியம் மீதான தாக்குதல் அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. நா. சபையின் பொன்விழாவை ஒட்டிய முதல்நாள் மாநாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றவுள்ளார். [ஐ]

# எண்ணெய் விநியோகம்: உடன் நிறுத்த முடிவு

### விமானங்களுக்கும் இல்லை

எண்ணெய்க் குதங்கள் தீப்பற்றி எரிவதை அடுத்து— உள் நாட்டில் எண்ணெய் விநியோகத்தையும், வெளிநாட்டு விமானங்களுக்கான எரிபொருள் விநியோகத்தையும் உடனடியாக தடை செய்வது என பாதுகாப்பு [illegible] ஒன்றில் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பி. பி. ஸி அறிவித்தது.

தற்போது கைவசமுள்ள மட்டுப்படுத்தப்பட்ட அளவு எண்ணெய்யை— ஆஸ்பத்திரி போன்ற— அவசர சேவைகளுக்கு வழங்குவதற்கு வசதியாகவே எண்ணெய் விநியோ[illegible] (உ-ஐ)

# ஹெலிகள் ரோந்து!

கொழும்பு, ஒக். 21

எண்ணெய்க் குதங்களில் பற்றிய தீ அயலில் உள்ள இடங்களுக்குப் பரவுகின்றதா என்பதைக் கண்காணிக்கும் பணியில் விமானப்படை ஹெலிகொப்டர்கள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளன. (ஐ)

# அமைதி பேண கோருகிறார் ரணில்

கொழும்பு, ஒக். 21

தற்போதைய சூழ்நிலையில் பொலீஸாருடனும், பாதுகாப்புப் படையினருடனும் ஒத்துழைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு நகரில் சட்டத்தையும், அமைதியையும் பேணவேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# உத்தர பிரதேசம் மத்திய அரசு ஆட்சியின் கீழ்

புதுடில்லி, ஒக். 21

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம் மத்திய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா இதுபற்றிய பிரகடனத்தை வெளியிட்டார்.

உத்தரப் பிரதேச முதலமைச்சர் மாயாவதியின் பகுஜன் சமாஜக் கட்சி கவிழ்ந்ததை அடுத்து அங்கு அரசியல் நெருக்கடி ஏற்பட்டது.

பாரதிய ஜனதாக் கட்சி அதன் ஆதரவை வாபஸ் பெற்றதில் மாயாவதி அரசாங்கம் கவிழ்ந்தது தெரிந்ததே. [ஓ-ஸ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் பெறுவதற்கு வாகனங்கள் படை எடுப்பு

## நகரில் போக்குவரத்து நெரிசல்

கொழும்பு, ஒக். 21

கொழும்பு நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை நோக்கி நேற்று அதிகாலை முதல் வாகனங்கள் படையெடுக்கத் தொடங்கியதால் நகரில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

கொலன்னாவை மற்றும் ஊறுகொடவத்தை எண்ணெய்க் குதங்கள் தீப்பற்றிய செய்தி பரவியதும் தமது வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்காக வாகன உரிமையாளர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக முண்டியடித்தனர்.

பெருமளவிலான எரிபொருள் தீயில் நாசமாகியுள்ளதை அடுத்து பெற்றோல் மற்றும் எரிபொருளுக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து உருவாகியுள்ளது. (உ-ஐ)

# வான் வரை எழுந்த பெரும் தீச் சுவாலை

## கொழும்பு நகர் எங்கும் தெரிந்தது

கொழும்பு, ஒக். 21

கொலன்னாவை மற்றும் ஊறுகொடவத்தை எண்ணெய்க் களஞ்சியங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்பை அடுத்து அங்கிருந்த எண்ணெய்க் குதங்களில் பெரும் தீச்சுவாலைகள் எழுந்தன.

பல நூற்றுக்கணக்கான அடி உயரத்துக்கு தீச்சுவாலை கிளம்பியது. பீதியூட்டும் வகையில் கரும் புகைமண்டலம் விண்ணில் மேலெழுந்தது.

எண்ணெய்க் குதங்கள் தீப்பற்றி எரிந்ததால் எழுந்த கடும் புகைமண்டலத்தை கொழும்பு மாநகரின் பெரும் பகுதிகளில் இருந்து பார்க்க முடிந்ததாக செய்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

எண்ணெய்க் குதங்கள் தீப்பிடித்து எரிவதை களனிப் பாலத்தில் இருந்து விசேட படப்பிடிப்பு குழுவினர் மூலம் ரூபவாஹினி இன்று காலை நேரடியாக ஒளிபரப்பியது. (ஐ)

## வீரச்சாவு

### எட்வின் சந்திரகாந்தன்

(இளம் புலி)

கிளாலையைச் சேர்ந்தவர்களும், தற்போது இல 38/1, யாழ். ஈச்சமோட்டை வீதியில் வசிப்பவர்களுமான எட்வேட் (சந்திரா) றெஜி தம்பதிகளின் அன்புப் புதல்வன் வீரவேங்கை இளம்புலி (எட்வின் சந்திரகாந்தன்), (புனித. ஹென்றி அரசர் கல்லூரி ஆண்டு 11 மாணவன்) வீரச்சாவடைந்து விட்டார்.

இவர் சந்திரதீபன், சந்திரபானு, சந்திரவிந்தன், சந்திரயானு ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று, அவர்களின் வசிப்பிடத்தில் நடைபெற்று, வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எட்வேட் [சந்திரா]
(தகப்பன்)

(39096)

## மரண அறிவித்தல்

### திருமதி திலகவதி நாகராசா

உரும்பிராய் V.T. செல்லத்துரை வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி திலகவதி நாகராசா 20-10-95 வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு காலமாகிவிட்டார்.

இவர் க. நாகராசாவின் அன்புமனைவியும், சோமசுந்தரம் – சரஸ்வதி தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற கனகசபை – அன்னம்மா தம்பதிகளின் மருமகளும், சாந்தரூபன் (கனடா), திருமதி குமுதினி விஜயகுமார் (கனடா), திருமதி சயந்தினி இரவீந்திரவரதன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், தக்சாவின் (கனடா) அன்புப் பேர்த்தியும், திரு. திருமதி தம்பிஐயா அவர்களின் மைத்துனியும், திருமதி புஸ்பவதி வாமதேவன், திருமதி மகேஸ்வரி வேதாரணியம், திருமதி குகனேஸ்வரி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 333 (537A), நாவலர் வீதியிலுள்ள சகோதரி திருமதி மகேஸ்வரி வேதாரணியம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சனிக்கிழமை காலை 10 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
க. நாகராசா (கணவன்)
333 (537A), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(வைரவபிள்ளையார் கோயிலுக்கு அருகில்).

(39090)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2இல் உள்ள அச்சகத்தில் 21 - 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# மேலும் 2 தடவைகள் "ஹபரண" மூலம் மா

யாழ்ப்பாணம், ஒக். 21

குடாநாட்டுக்கு மனிதாபிமான அடிப்படையில் திருகோணமலையில் இருந்து தமது கப்பலான "ஹபரண" மூலம் மேலும் இரு தடவைகள் மாவை எடுத்துவர செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு இணங்கியுள்ளது.

இதன்படி — எதிர்வரும் 26 ஆம் திகதி ஆயிரத்து 950 மெற்றிக் தொன் மாவையும் —

அடுத்த மாதம் 8 ஆம் திகதி ஆயிரம் மெற்றிக் தொன் மாவையும் — எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினரின் கோரிக்கையின் பேரில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது. [இ-3]

## ஜெயலலிதாவுக்கு தனி விமானம்

சென்னை, ஒக். 21

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் பாவனைக்காக 18 கோடி ரூபா செலவில் தனி ஜெட் விமானம் ஒன்று அமெரிக்காவில் இருந்து வாங்கப் பட்டுள்ளது.

இரட்டை என்ஜின் வசதி கொண்ட இந்த ஜெட் விமானம் நேற்று சென்னை வந்து சேர்ந்தது. (ஐ)

### வடக்கில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

அவர் தமது செய்தியில் கூறியதாவது:-

எண்ணெய்க் குதங்களை நாசமாக்க நடத்திய இச்சம்பவம் காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் என மக்கள் கருதக்கூடும். இதில் எதுவித உண்மையுமில்லை.

சுமார் ஒன்றரை மாதத்திற்குத் தேவையான எரிபொருள் கைவசமுள்ளது. தட்டுப்பாடு ஏற்படலாம் என நினைத்து எரிபொருட்களை வாங்கிச் சேகரிக்கத் தேவையில்லை. நிலைமையை அவதானிப்பதற்காகவே எரிபொருள் விநியோகத்தை நிறுத்துமாறு கோரியிருந்தோம்.

தவறான தகவல்கள் குறித்தோ வதந்திகள் குறித்தோ குழப்பமடைய வேண்டாம்.

தாக்குதல் நடத்தியவர்கள் என நாங்கள் சந்தேகப்படுவோரில் சிலர் கொல்லப்பட்டுள்ளனர், சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்; இருவர் சரணடைந்துள்ளனர். சரணடைந்துள்ள இருவரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி அவர்கள் பயன்படுத்திய வாகனம், கொண்டுவந்த ஆயுதங்கள் போன்ற விவரங்கள் கிடைத்துள்ளன.

நாட்டில் சமாதானத்தை உருவாக்கும் நோக்கில் ஜனாதிபதி மேற்கொண்டு வரும் நடவடிக்கையின் ஒரு அங்கமாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு அதில் படிப்படியான முன்னேற்றங்களை அடைந்து வரும் இந்நேரத்தில்—

இந்த இராணுவ நடவடிக்கைகளைத் திசை திருப்பும் நோக்கிலேயே தீவிரவாதிகள் இந்த நடவடிக்கையில் இறங்கினார்கள் என்றே நம்புகிறோம். எதுவரினும் இராணுவ நடவடிக்கையை நிறுத்தமாட்டோம் என எனது அரச சார்பில் உங்களுக்கு வாக்குறுதி அளிக்கிறேன்.

தமிழ் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுக்கொடுத்து பிளவுபடாத நாட்டில் அனைவரும் சமாதானத்துடன் வாழவேண்டும் என்பதே எமது நோக்கமாகும். இந்தக் கொள்கையிலிருந்து நாம் ஒருபோதும் மாறமாட்டோம் என உறுதியளிக்கிறேன் — என்று தெரிவித்தார். (ஐ-10)

### துப்பாக்கிச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றைப் பிடித்து ஜோர்ஜ் ஆர்னியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதாகவும் ராசிகா இக்பால் மேலும் தெரிவித்தார். (இ)

### எண்ணெய்க் குதங்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் தெரிவிக்கப்பட்டது.

மொத்தம் 47 குதங்களில் ஊறுகொடவத்தையில் நான்கு குதங்களும் கொலன்னாவையில் மூன்று குதங்களும் எரிவதாக ஸ்ரீலங்கா அரசு தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

வெளிநாட்டு விமானங்கள், கப்பல்கள், மற்றும் வடக்கு கிழக்கில் யுத்தம் செய்யும் படையினருக்கான பிரதான எரிபொருள் விநியோக நிலையங்களாக இவை இருந்து வந்தன.

எண்ணெய்க் குதங்கள் தீப்பற்றியதால் ஏற்பட்ட புகைமூட்டம் காரணமாக கொழும்பு நகரில் நேற்று பெரும் பதற்றம் நிலவியது.

பல்லாயிரக் கணக்கானோர் சம்பவம் இடம்பெற்ற பகுதிகளில் இருந்து நேற்று வெளியேறி இருந்தனர்.

கையில் அகப்பட்ட பொருள்களுடன் குழந்தை குட்டிகளுடனும் அவர்கள் சாரி சாரியாக களனிப்பாலத்தினூடாக கொழும்பு நகருக்குள் பிரவேசிப்பதை ரூபவாஹினி ஒளிபரப்பியது.

இப்படி வெளியேறிய மக்கள் வெல்லம்பிட்டியில் உள்ள பாடசாலை ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று நண்பகலுடன் நீக்கப்படும் என அறிவிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 4 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மக்களை அமைதியாக இருக்குமாறு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்று நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டார். (இ)

### ஆயுதபாணிகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த ஒருவரும் அடங்குவர் எனவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

பாதுகாப்புப் படையினர் இவ்வாறான எதிர்த் தாக்குதல்களை நடத்தியிராவிட்டால் நிலைமை மிக மோசமாக இருந்திருக்கும் என்றும் —

ஆயுதபாணிகளால் நகரில் மேலும் பாரிய சேதங்கள் ஏற்பட்டிருக்கும் என்றும் அரச தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

குண்டுத் தாக்குதல் சம்பவத்தையடுத்து திகிலடைந்து வீடுகளை விட்டு வெளியேறி கால்போன போக்கில் ஓடிக்கொண்டிருந்த பொதுமக்கள் ஆயுத பாணிகளுக்கும் படையினருக்கும் இடையேயான துப்பாக்கிச் சண்டையின் நடுவில் சிக்கி அல்லோலகல்லோலப்பட நேர்ந்தது.

பொலீஸார் சுட்டனர்

கலவரமடைந்த பொதுமக்கள் படையினரின் கட்டுப்பாடுகளை மீற முற்பட்ட போது பல இடங்களில் கண்டபடி பொலீஸார் வேட்டுக்களைத் தீர்த்தனர். இதன் போதும் பொதுமக்கள் பலர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த பெரும் எண்ணிக்கையானோர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொலன்னாவ, ஊறுகொடவத்தை பகுதிகள் நேற்று நண்பகல் வரை வேட்டுச் சத்தங்களால் அதிர்ந்து கொண்டிருந்தன.

குண்டுத் தாக்குதலை நடத்திய ஆயுதபாணிகள் அப்பிரதேசத்தில் நீண்ட நேரம் மறைந்திருந்து பாதுகாப்பு படையினர் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தினர்.

இதனால் படையினரும் பொலீஸாரும் கலவரமடைந்து காணப்பட்டனர்.

அவர்கள் பாதுகாப்பு நிலை எடுத்து — கட்டடங்களின் பின்னால் மறைந்திருந்தபடி — ஆயுதபாணிகளுடன் துப்பாக்கிச் சமர் புரிந்ததை ரூபவாஹினி நேற்று மாலை ஒளிபரப்பியது.

திகில் நிறைந்த ஆங்கிலப் படம் ஒன்றின் காட்சிகளை ஒத்ததாக அவை இருந்தன.

தப்பிச் சென்ற ஆயுதபாணி ஒருவர் தெமட்டகொட ரயில்வே பகுதியில் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக பிரதிப் பொலீஸ் மா அதிபர் தெரிவித்தார்.

தாக்குதல் நடத்திய ஆயுதபாணிகள் அங்கிருந்து தப்பிச் செல்லும்வரை வேட்டொலிகள் கேட்டபடியே இருந்தன.

விமானப்படையினர், கடற்படையினர் உட்பட பெருமளவிலான பாதுகாப்பு படையினரும் பொலீஸாரும் அப்பகுதி எங்கும் குவிக்கப்பட்டிருந்தனர். (ஐ-3-4-6)

நினைவிருக்கிறதா? நவம்பர் 4

போலியோ ஒழிப்பு தினம்

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் யாவருக்கும் ஒரேநாளில் போலியோ தடுப்பு மருந்து!

ஏற்கனவே போலியோ தடுப்பு மருந்தைப் பெற்ற பிள்ளைகளுக்கும் இது மிக அவசியமானது.

தவறவிடாதீர்கள்!

உங்கள் குழந்தையின் பாதுகாப்பை உறுதிசெய்யுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org